செய்தி வெளியீட்டு எண் : 413 நாள்: 01.11.2021

**சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2022 வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தலர் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2022 வரைவு வாக்காளர் பட்டியலினை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, அவர்கள் வெளியிட கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர்கள் பெற்றுக்கொண்டனர்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டம் 01.01.2022 அன்று தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணியின் கீழ் 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கம், திருத்தம் தொடர்பாக வாக்காளர் பட்டியல் தொடர் சுருக்கத் திருத்தப்பணி மேற்கொள்ள தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி 01.11.2021 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது, இவ்வரைவு வாக்காளர் பட்டியலில் 01.11.2021 ன்படி இடம்பெற்றுள்ள வாக்காளர்கள் விவரங்கள்

| **எண்சட்டமன்ற தொகுதி** | **மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை** | **ஆண்** | **பெண்** | **இதரம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| 77. உளுந்தூர்பேட்டை | 337 | 148138 | 145971 | 48 | 294157 |
| 78. ரிஷிவந்தியம் | 305 | 135816 | 132521 | 58 | 268395 |
| 79. சங்கராபுரம் | 300 | 133444 | 134764 | 48 | 268256 |
| 80. கள்ளக்குறிச்சி(தனி) | 330 | 142281 | 144878 | 57 | 287216 |
| **மொத்தம்** | **1272** | **559679** | **558134** | **211** | **1118024** |

மேலும், இவ்வரைவு வாக்காளர் பட்டியல்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி, வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்/சார் ஆட்சியர் அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நகராட்சி அலுவலகங்கள், நியமன வாக்குசாவடி அமைவிடங்கள், வாக்காளர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாக்காளர்கள் தங்கள் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள பதிவு பெற்ற இணையதள தேடல் மையங்களின் மூலமாகவும், இந்திய தேர்தல் ஆணையம் இணையதளம் (**www.nvsp.in**) மூலமாகவும் வாக்காளர்களாக பெயர்கள் பதிவு செய்யப்பட்ட விவரம் சரிபார்த்துக்கொள்ளலாம்.

2022 வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப் பணிகளின்கீழ் அனைத்து சட்டமன்ற தொகுதிகளில் 01.11.2021 முதல் 30.11.2021 வரையிலான காலங்களில் அலுவலக வேலை நாட்களில், வேலை நேரங்களில் பல்வேறு கோரிக்கை மனுக்களை உரிய படிவத்தில் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வாக்குசாவடி நிலை அலுவலர் ஆகியோரால் பெறப்பட உள்ளது. இதுதவிர பொதுமக்கள் இணையதளம் (**www.nvsp.in**) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

கூடுதல் விவரங்களுக்கு, பொதுமக்கள் வாக்காளர் பட்டியல் தொடர்பாக தகவல்கள் ஏதும் தேவைப்பட்டால் அலுவலக வேலை நாட்களில், வேலை நேரங்களில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் செயல்படும் வாக்காளர் சேவை மைய தொலைபேசி எண்.1950- மற்றும் 04151-220200 யை தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்

மேலும் 13.11.2121 (சனிக்கிழமை), 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை), 27.11.2021 (சனிக்கிழமை) மற்றும் 28.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வாக்குசாவடி மையங்கள் அமைந்துள்ள இடங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. பொது மக்கள் அனைவரும் சமூக இடைவெளியினை பின்பிற்றி தங்களது கோரிக்கை மனுக்களை மேற்படி சிறப்பு முகாம் நாட்களில் காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை சம்மந்தப்பட்ட வாக்குசாவடி மைய அமைவிடங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்குசாவடி நிலை அலுவலர்களிடம் நேரில் அளிக்கலாம் இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.விஜய்பாபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)திரு.டி.சுரேஷ், கள்ளக்குறிச்சி கோட்டாட்சியர் திரு.எஸ்.சரவணன், திருக்கோவிலூர் கோட்டாட்சியர் செல்வி.கி.சாய்வர்தினி, தேர்தல் வட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

<u>செய்தி வெளியீடு:</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.